# ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த மோடி அரசைக் கண்டித்து கழகம் நடத்திய பொதுக்கூட்டங்கள்!



விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனத்தில் ஒன்றிய மோடி அரசை கண்டித்து நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் கழகத் துணை பொது செயலாளரும்,வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கண்டன உரை நிகழ்த்தினார். உடன் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், தலைமைக் கழக பேச்சாளர் குத்தாலம்கல்யாணம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



விருதுநகர் தெற்கு மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் மோடி அரசைக் கண்டித்து நகர தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் அய்யாவு பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கம்பம் செல்வேந்திரன் பேசினார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பேசினார். இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழகப் பேச்சாளர் வரகூர் காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குன்னூர் அ.சீனிவாசன், மாவட்ட விளையாட்டு மேம்பட்டு அணி அமைப்பாளர் கே,கே. எஸ்.எஸ்.ஆர்.ஆர்.இரமேஷ், நகர் மன்ற தலைவர் தங்கம் ரவி கண்ணன், மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.வி.கே.துரை, அவைத் தலைவர் செல்வம், ஒன்றியச் செயலாளர்கள் மல்லி ஆறுமுகம், வத்திராயிருப்பு முனியாண்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து விளாத்திகுளத்தில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் திருமதி பெ.கீதாஜீவன் அவர்கள் தலைமையில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் ஆரூர் மணிவண்ணன், திருப்பூர் கூத்தரசன் கண்டன உரையாற்றினார்கள். இதில் கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து புதியம்புத்தூரில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் அத்திப்பட்டு சாம்ராஜ், சிங்கை பிரபாகரன் சிறப்புரை ஆற்றினார்கள். உடன் மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், முன்னாள் சேர்மன் ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் செங்குழி ஏ.பி. ரமேஷ், சதிஸ்குமார், டி.பி.பாலசிங், பரமங்குறிச்சி இளங்கோ, நவீன் குமார், பி.ஜீ.ரவி, இளையராஜா, ஜெயக்கொடி, தூத்துக்குடி மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, செந்தூர் மணி, சந்திர சேகரன், பில்லா ஜெகன், மாவட்ட அவைத் தலைவர் அருணாச்சலம், மணல்மேடு சுதாகர் மற்றும் ஒன்றிய அணி நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், வார்டு செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வார்டு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் தெற்கு மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் மோடி அரசைக் கண்டித்து நகர தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் அய்யாவு பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கம்பம் செல்வேந்திரன் பேசினார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே. கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பேசினார். இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழகப் பேச்சாளர் வரகூர் காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குன்னூர் அ.சீனிவாசன், மாவட்ட விளையாட்டு மேம்பட்டு அணி அமைப்பாளர் கே. கே.எஸ்.எஸ்.ஆர்.இரமேஷ், நகர் மன்றத் தலைவர் தங்கம் ரவி கண்ணன், மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.வி.கே.துரை, அவைத் தலைவர் செல்வம், ஒன்றியச் செயலாளர்கள் மல்லி ஆறுமுகம், வத்திராயிருப்பு முனியாண்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மோடி அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் வடலூரில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.சிவகுமார் வரவேற்றனார். தலைமை கழகப் பேச்சாளர்கள் சன்.சங்கர், சோம.செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்டக் கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், மேயர் சுந்தரிராஜா, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசியில் மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மாநகர தி.மு.க. செயலாளர் உதயசூரியன் தலைமையில் நடைபெற்றது. நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் முத்துவளவன், வாஞ்சிநாதன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், மாநில வர்த்தக அணி வனராஜ், திருச்சுழி ஒன்றியச் செயலாளர் பொன்னுத்தம்பி, சிவகாசி ஒன்றியச் செயலாளர்கள் விவேகன் ராஜ், தங்கராசு, சிவகாசி பகுதிச் செயலாளர் காளிராஜன், மாவட்டத் துணைச் செயலாளர் ராமமூர்த்தி, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் சண்முகராஜன், காரியாபட்டி ஒன்றிய செயலாளர் மந்திரியோடை கண்ணன், மாவட்டப் பிரதிநிதி ராஜேஷ், சிவகாசி கிழக்கு ஒன்றியச் செயலாளர் கோபிகண்ணன், பகுதிக் கழகச் செயலாளர்கள் கருணாநிதி பாண்டியன்,அ.செல்வம், அப்துல் முத்தலிப், ஜி.மாரீஸ்வரன், முன்னாள் வைஸ் சேர்மன் பொன். சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து மதுரை செல்லூரில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவரும் தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளருமான திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். மேயர் இந்திராணி பொன் வசந்த், மகளிர் அணி செயலாளர் சரவண புவனேஸ்வரி, மாநகர தி.மு.க. நிர்வாகிகள் குழந்தைவேலு, வேலுச்சாமி, ஒச்சுபாலு, ஜெயராம், அக்ரி கணேசன், வட்டக் கழகச் செயலாளர் கருப்பு ராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் தொ.மு.ச. பேரவை செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சண்முகம், தலைமைக் கழக பேச்சாளர் ஆலங்குளம் மரியராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். பொதுக்கூட்டத்தில் என்.தில்லைசெல்வம், ஜெ.ஹெலன் டேவிட்சன், என்.தாமரைபாரதி, வழக்கறிஞர் லிவிங்ஸ்டன், எப்.எம்.இராஜரத்தினம், ஐ.கேட்சன், பாபு, செல்வன், பிராங்களின், சற்குருகண்ணன், லிவிங்ஸ்டன், சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, சுந்தர்சிங், நாகூர்கான், ஜவஹர், சேக்மீரான், துரை, ஜீவா, ஆர்.சதாசிவன், பார்த்தசாரதி, சிவன்பிள்ளை உட்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.